**புலத்கொஹுபிட்டிய பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 16 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான புலத்கொஹுபிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் கணக்கீட்டுக் குறைபாடுகளின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டிருந்த ரூபா 145,986 பெறுமதியான ராக்கையைத் தயாரிப்பதற்கான செலவினத்தைச் சீராக்குவதற்கு 8 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் சீராக்கல் செய்கையில் மூலதனப் பயன்பாட்டிற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக அதேயளவு தொகை ஆண்டிற்கான செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட லெப்டொப் கணனி ஒன்றை மூலதனமாக்குவதற்கு 9 ஆம் இலக்க நாட்குறிப்பைப் பயன்படுத்துகையில் குறித்த செலவினத்தை மீளாய்வாண்டினது வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் வரவு வைத்தமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 50,100 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2015 சனவரி முதல் டிசெம்பர் வரையான காலத்திற்குரிய கேகாலை மஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலிருந்து பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 109,367 ஆகும். இது பெற வேண்டிய வருவாயின் கீழும் கடன்பட்டோரின் கீழும் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூர்க்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் ரூபா 1,120,345 ஆகும். எனினும், கடன் கொடுத்தோரின் கீழ் ரூபா 746,897 ஆக அது காட்டப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோரது தொகை ரூபா 373,448 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்குப் பெற வேண்டிய கடன்பட்டோர் தொகை ரூபா 14,568,509 குறைவாகவும் கடன் கொடுத்தோர் தொகை ரூபா 12,347,748 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிலையான சொத்துக்களுக்கும் மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாயின் பங்களிப்பு கணக்குக்குமிடையேயான ரூபா 203,733 வித்தியாசத்தைக் கண்டறிந்து அதனைச் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) உள்ளூர்க்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்ற கடனுக்குரிய 2015 ஆம் ஆண்டின் வட்டியாகிய ரூபா 249,753 செலவினமாகக் கணக்கிலிடப்படாததால் பற்றாக்குறை அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினக் கடன் கொடுத்தோர் ரூபா 3,106,790 ஆகும். எனினும், கணக்குகளில் அது ரூபா 2,668,049 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 438,741 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2015 ஆம் ஆண்டில் மானியமாகப் பெறப்பட்ட ரூபா 6,000,000 பெறுமதியான 03 வாகனங்கள் கணக்கிலிடப்படாமையால், இயந்திர சாதன கணக்கு அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன், மூலதனப் பயன்பாட்டிற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டுமிருந்தது.

(ஒ) பிரதேச சபையின் வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்குச் செலவிட்ட ரூபா 77,550 காணி மற்றும் கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாயின் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது ஆண்டிற்கான செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஓ) பிரதேச சபைக் கட்டிடத்தின் பாதுகாப்பு அரண் தொடர்பாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 219,356 காணி மற்றும் கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாயின் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது ஆண்டிற்கான செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மூலதனச் செலவினத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 35,188 பெறுமதியான 3 விடயங்கள் மீண்டுவருஞ் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின்படி 10 கணக்கீட்டு விடய மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 25,561,239 ஆகும். எனினும் உப பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் கணக்கீட்டு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 25,652,100 ஆகியமையால் ரூபா 90,861 வித்தியாசம் ஏற்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 03 முதல் 06 ஆண்டுகளைக் கடந்த கணக்கீட்டு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 149,861 ஆகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டைக் கடந்த கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதி ரூபா 11,346,813 ஆகும்.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை நிதிப்பிரமாணக் கோவை | |
| நி.பி 571 | 2006 முதல் 2010 வரையான காலப்பகுதிக்குரிய காலங்கடந்த ரூபா 6,138,845 வைப்புகள் தொடர்பாகக் குறித்த நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வைப்புத் தொகையில் பொதுச் சந்தையிலுள்ள கடைகளை முன் கூட்டியே விற்பனை செய்யும் அடிப்படையில் பெறப்பட்ட குத்தகைப் பணமாகிய ரூபா 4,757,859 அடங்கியிருந்தது. அத்தொகை கடைகளை நிர்மாணிப்பதற்குச் செலவிடப்பட்டதாகவும் அது வைப்புக் கணக்கினூடாகத் தீர்த்து வைக்கப்படவில்லை எனவும் தெரிய வந்தது. |
| (ஆ) இலங்கை குடியரசின் சபரகமுவ மாகாண சபையின் நிதிக் கோவை | |
| (i) 261.2.2 ஆம் விதி | செயல் நிமித்தக் கட்டு நிதியாகப் பெறப்படும் முற்பணத்தில் எஞ்சும் தொகை பணி முடிவடைந்த தினத்தன்றோ அல்லது அடுத்து வரும் வேலை நாள் அன்றோ தீர்த்து வைக்கப்படவேண்டுமாயினும், 2012 செப்டம்பரிலிருந்து ரூபா 69,038 தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (ii) 283.4 ஆம் விதி | வழங்கப்பட்டு கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் ரூபா 31,769 கூட்டுத் தொகையுடைய 08 காசோலைகள் சம்பந்தமாக மாகாண நிதிசார் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 582,054 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 4,513,231 ஆகியமையால் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறுகளில் ரூபா 5,095,285 முன்னேற்றம் தென்படுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளின் ரூபா 5,095,285 அதிகரிப்பிற்கு 05 வருவாய் விடயங்களிலான அதிகரிப்பும் 04 செலவின விடயங்களிலான குறைவும் பிரதான காரணிகளாகின.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

(அ) செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாயினது தோற்றுவாய் | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை | | | | | |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வை வரி | 183 | 133 | 773 | 645 | 50 | 128 | 178 |
| (ii) | குத்தகை வாடகை | - | - | 337 | 337 | - | - | - |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | - | - | 211 | 211 | - | - | - |
| (iv) | ஏனைய வருவாய் | - | - | - | 1079 | - | - | - |

(ஆ) சபை வழங்கிய வருவாய் நிலுவைத் தகவல்களின்படி தீர்வை வரியின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய மீதி ரூபா 178,243 ஆகும். எனினும், கணக்கில் அம்மீதி ரூபா 227,303 ஆகவிருந்தது.

### 2.3.2 தீர்வையும் வரியும்

சபைக்குரிய தீர்வை வரிச் சொத்துக்கள் 2009 ஆம் ஆண்டில் யட்டியாந்தோட்டை பிரதேச சபையிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களாகும். பின்னர் இச் சொத்துக்களை மீள மதிப்பீடு செய்யவும் தீர்வை வரிக் கட்டணத்தை மீளாய்வு செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் சனநாயக நிர்வாகம் தொடர்பான அமைச்சினால் 2015 ஆம் ஆண்டிற்கென குறைந்த வருவாய் ஈட்டுவோர் உள்ள பிரதேச சபைகளைச் சக்தி மிக்கதாக்குவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 7,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,202,899 மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன், முறையான முகாமைத்துவமின்மையால் சபை ரூபா 5,797,101 இழப்பிற்குள்ளானது.

(ஆ) புலத்கொஹுபிட்டிய நகர வாரச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கான வேலை 2014 சனவரி முதல் அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2015 டிசெம்பர் 31 வரை அவ்வாரச் சந்தை நிர்மாணிக்கப்படாதிருந்ததால், வாரச் சந்தையை நடாத்துவதற்கு நாளொன்றிற்கு ரூபா 5,000 வீதம் காணி ஒன்றை வாடகையாகப் பெற்று 2014, 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 480,000 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2014 தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 21,469,814 மதிப்பீட்டின் கீழ் மயானம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான வேலை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 06 வரை நிர்மாண வேலை முடிவடையாததால், மயான வளாகத்தைச் சபை பயன்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலக நிதி ஏற்பாட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டவற்றிற்குரிய நிர்வாகச் செலவினத்தைப் பெறுவதற்கு முன்னர் பொருட் கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகியவாறு இரத்தினபுரி மாவட்ட வங்கிச் சங்கத்திடமிருந்து ரூபா 172,950 பெறுமதியான கணனிகள், ஒரு வெப் கெமரா, ஒரு டிஜிடல் கெமரா, ஒரு யூபீஎஸ் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கான கட்டளை வழங்கப்பட்டபோதும், பணம் பெறப்படாமையால் 2015 ஆகஸ்ட் மாதத்தில் சபையின் நிதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 2014 வீட்டுக்கு வீடு கிராமத்திற்குக் கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 20 பிரதேச சபை வேலைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 7,022,666 நிதியேற்பாட்டின் பௌதீக முன்னேற்றம் 100 சதவீதமானபோதும், ரூபா 6,591,802 மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டில் பழைய கிராம நீதிமன்றக் கட்டிடத்தைச் சுவீகரித்து, ரூபா 3,180,000 பெறுமதியாகக் கணக்கிலிடப்பட்டிருந்தபோதும், அப் பெறுமதிக்குரிய தலைமை விலை மதிப்பீட்டாளரின் அறிக்கை ஒன்று பெறப்படாததுடன் அது நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவுமில்லை.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) ஒவ்வொரு உத்தியோகத்தரது சேமிப்புக் கணக்குப் புத்தகங்களிலும் ஊழியர் பிணை வைப்புப் பணமாகிய ரூபா 59,700 வைப்பிலிடப்படுவதற்குப் பதிலாக அவை பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) இடமாற்றத்திற்குள்ளான 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்த ரூபா 56,380 கூட்டுத் தொகையுடைய ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2015 சனவரி 07 முதல் 2015 டிசெம்பர் 28 வரை டிப்பர் வாகன வருவாயாக ரூபா 260,310 காட்டப்பட்டிருந்ததுடன், வருவாயைச் சேகரிப்பதற்கு முறையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. சில சந்தர்ப்பங்களில் கிலோ மீட்டர் தூரத்திற்குக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. வேறு சில சந்தர்ப்பங்களில் நாளாந்தக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) மானெல் மலர்ச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு மலர்ச் செடிகளை வழங்குவதற்கு வென்னப்புவ போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு சபையினது டிப்பர் வாகனத்தை ஒரு நாளைக்கு வழங்குவது என சபை தீர்மானித்திருந்ததுடன், அத்தீர்மானப்படி பஸ் வண்டி வாடகையாக ரூபா 8,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) நாளாந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட டிப்பர் வாகனத்தின் சாரதிக்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி நாளாந்தப் படிக்குப் புறம்பாக நாளாந்தம் ரூபா 750 வீதப்படி 7 சந்தர்ப்பங்களில் ரூபா 5,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவையின் 5(7) க்கமைய நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாகப் போதிய உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வது தலைவரின் கடமையாகும். எனினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.2 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

2015 வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 11 சந்தர்ப்பங்களில் மொத்த நிதி ஏற்பாடாகிய ரூபா 39,600 முற்றாகவே சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்து முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) வருவாய் நிர்வாகம்